# இரட்சிப்பு செப்டம்பர் 2026 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் 9வது மாதத்திற்குள் நம்மை வழிநடத்திய நம் ஞானாதி ஞானவர் இயேசுவின் பாதம், பணிந்து தொழுவோம். இம்மாதம் 5ம் தேதி முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர். சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள் - ஆசிரியர் தினம் (TEACHERS DAY), 21ம் தேதி அப்போஸ்தலரும் சுவிசேஷகருமான தூய. மத்தேயுவின் திருநாள் (FEAST DAY OF ST. MATTHEW, THE APOSTLE AND EVANGELIST), 27ம் தேதி தென்னிந்தியத் திருச்சபை உருவாக்க நாள் (CSI FORMATION DAY/CSI DAY), 29ம் தேதி பிரதான தூதர்களான காபிரியேல், மிகாவேல், ரஃபேல் ஆகியோரின் திருநாள் (FEAST DAY OF THE ARCHANGELS GABRIEL, MICHAEL, AND RAPHAEL) ஆகிய திருநாட்களை நாம் ஆசரிக்கிறோம். இந்நாட்களை ஜெபத்துடன் ஆசரித்து, ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் நினைவுபடுத்துகிறோம்.

ஜெப-ஜன்னல்-PWPM, வேதாகம-போட்டிகள்-RBKS, அனைவரும்-ஊழியத்தில்-AIMS ஆகிய திட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியம், புத்தக வெளியீட்டு ஊழியம், வலைதள ஊழியம் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஒளிபரப்பு ஊழியம், சமூக ஊடக ஊழியம், கைப்பிரதி ஊழியம் (GOOD SEEDS), மிஷனரி ஊழியம் (NMS), திருச்சபை ஊழியம் (CSI), ஆகிய நமது ஊழிய இயக்குநரின் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள், காணிக்கைகள் அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பவும். தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI மற்றும் QR CODE ஆகியவை இப்பத்திரிக்கையின் 18வது பக்கத்திலும், நமது வலைதளத்திலும் உள்ளன. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# இரட்சிப்பு இணைத் திருமறை

## (தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு)

வேத-வரிகள்-187 செப்டம்பர் 2026 சங்கீதம்-147:16

சத்திய வேதம் (ரேனியஸ்-1840)
பெருநெஞ்சன், வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம்புகிற மனுஷனோ புஷ்டியடைவான்.

பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)
பெருநெஞ்சன், வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம்புகிற மனுஷனோ செழிப்பான்.

திருவிவிலியம் (பொது-1995)
**பேராசைக்காரன்** சண்டை மூளச்செய்வான்; ஆண்டவரையே நம்பியிருப்பவர் நலமுடன் வாழ்வார்.

பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)
**சுயநலக்காரன்** துன்பத்துக்கு காரணமாய் இருப்பான்; கர்த்தர்மேல் நம்பிக்கை வைப்பவன்
பரிசுகளைப் பெறுகிறான்..

## ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - செப்டம்பர் 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் நிறுத்தப்பட... உலகளாவிய போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட... நேபாள-திபத் எல்லையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்காக...

2) இந்தியாவில் மதப்-பிரிவினைவாத சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மை மக்கள் மீதான திட்டமிடப்பட்ட மறைமுக ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக மற்றும் அரசியல்-சாசன மரபுகளை மதித்து நடக்க... இந்தியாவில் போராடும் மக்களுக்கு நல்ல தீர்வு கிடைக்க...

3) தமிழ்நாட்டு மக்களின் ஒற்றுமை வாழ்வுக்காக... தமிழ்நாட்டில் தொழில்கள்-வியாபாரம் செழிக்க... மத-வாத, அடிப்படை-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட... தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்காக... புதிய அரசு உண்மை மற்றும் நேர்மையுடன் செயல்பட...

4) திரு.ஜோயன்ஸ் அவர்களின் இரட்சிப்பு மற்றும் ஆவியின் அபிஷேகத்துக்காக... திருமதி. சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5) திருமதி.ஜேனிஸ், திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி.ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) செல்வி.டிரிசியா லவ்ஸ்லி அவர்களின் திருமணம் சிறப்பாக நடைபெற... அவர்களுடைய ஆசீர்வாதமான குடும்ப வாழ்வுக்காக...

7) பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக... ஜெஃப்ரி S. ஆரோன், ஜேஃபியா S. அன்னா, ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், சிரில், ஷாலோம் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8) பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை, உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக... சிவா, கிளாட்சன், பார்வதி, பிரேம், ஜாஸ்மின், சிப்ரா, ஷிஃபியா, ஷெரின் டேவிட், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், பிரியங்கா, சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளை களுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

9) திரு.JR.டேவிட், திரு.RCP. நிக்ஸன், திருமதி. மல்லிகா, திருமதி.ஈவ்லின் USA, Dr.சலோமி மனோகர், சகோ.சவேரியம்மாள், திரு.செல்வராஜ், திருமதி.செல்வி, திரு.நெல்சன் (நகோமி), திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், திரு.வெஸ்லி சாமுவேல், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன், திரு.சுந்தர்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

10) திருமதி.ஏஞ்சலின் யோசபாத், திருமதி.ராஜேஷ்வரி, திரு.ஜெபனேசர், திருமதி.ஐரீன் வாக்கர், திருமதி.ஞானம் ஜெபராஜ், திருமதி.ஐலீன் செல்லத்துரை, திருமதி.வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

11) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு.ஜாண் இன்பராஜ், திருமதி.தீபா மெர்ஸி கிறிஸ்டோபர், திருமதி.அனிபாய் ஜாண், செல்வி.செல்சியா, திருமதி.ஐரீன் வாக்கர், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.SJP. ராஜா, திரு.JR. டேவிட், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.ராணி சாமுவேல்ராஜ் ஆகியோருக்காக... அவர்களுடைய குடும்பங்களின் ஆசீர்வாதங்களுக்காக...

==========================================================================================

ஆசிரியர் தினம் சிறப்பு தேவசெய்தி......

# ஞானமுள்ள ஆசிரியர்

## சம்பாதித்து வைத்துள்ள மரபுச் சொத்து



என் தகப்பன் எனக்குப் போதித்துச் சொன்னது:
"ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி."
நீதி.4:4மு, 5மு.

## THE LEGACY OF A WISE TEACHER

REV. SJD. DHARMARAJA, PRESBYTER & MISSION DIRECTOR, GOOD TIDINGS BIBLE PRINTS, CHENNAI - 93. SOUTH INDIA

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். செப்டம்பர் மாதம் என்றவுடனே நம் நினைவில் நிற்பது ஆசிரியர்தினம் ஆகும். ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுகிற இந்த வேளையில் உங்களில் ஆசிரியப்பணி செய்கிற ஒவ்வொருவருக்கும் எனதன்பின் ஆசிரியர் தின நல்வழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, ஆசிரியர் என்பவர், தான் கல்வி கற்றுக்கொண்டதில் இருந்தும், தன் பெற்றோரிடம் பெற்றுக் கொண்டதில் இருந்தும், தன் மாணவர்களுக்கென பல்வேறு கொடைகளை விட்டுச்செல்பவர் என்ற கருத்தின் அடிப்படையில் 'ஞானமுள்ள ஒரு ஆசிரியர் சம்பாதித்து வைத்துள்ள மரபுச்சொத்து' என்ற பொருளை மையமாகக் கொண்டு நீதிமொழிகள் 4:1-9 வசனங்களின் துணைகொண்டு சற்று நேரம் திருமறையைத் தியானிக்க உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

மாணவ மாணவிகளுக்கு, அவர்களுடைய ஆசிரியர்களிலெல்லாம் மூத்த ஆசிரியர் அவர்தம் தந்தை அல்லது தாய் ஆகியோரே. அவ்விதத்தில், சாலமோன் ஞானி, தன் தந்தையான தாவீது அரசனிடமிருந்து தான் கற்றுக்கொண்டதை (மரபுச் சொத்தை) அடுத்த தலைமுறைக்குக் கடத்துபவர் ஆகிறார். ஞானத்தை ஒரு விலைமதிப்பற்ற குடும்பப் பாரம்பரிய மரபுச் சொத்தாக கருதி, அதைப் பற்றிக்கொள்ளுமாறு அடுத்த தலைமுறையினரை அவர் இங்கு வலியுறுத்துகிறார்.

உலகில் வாழும் ஒவ்வொருவரும் ஒரு மரபுச் சொத்தை தன் வழிமரபினருக்கு விட்டுச் செல்கி றார்கள்; அது உலக பொருட்செல்வமாகவோ, உண்மையின் புதையலாகவோ அல்லது தூசியின் குவியலாகவோ இருக்கலாம். ஆனால், நீதிமொழிகள் 4:1-9 வசனங்கள், நமது பார்வையின் கோணத்தை மாற்றி, உலகப் பொருட்செல்வத்திடம் இருந்து தலைமுறை தலைமுறையாக நிலைத்து நம்மைத் தொடர்ந்து வரும் ஞானத்தின் பக்கம் திருப்புகின்றன. இங்கு சாலோமோன் ஞானியின் வார்த்தைகளின்படி, மரபுச்சொத்து என்பது, நாம், நம் பிள்ளைகளுக்கு விட்டுச்செல்லும்

செல்வத்தால் அளவிடப்படுவதில்லை, மாறாக, அது நாம் அவர்களுக்கென விட்டுச்செல்லும் ஞானத்தால் மாத்திரமே அளவிடப்படுகிறது.

**1. ஆசிரியர்களின் போதனைகளை பெற்றுக்கொள்ளுங்கள்: (வச. 1 - 4)**

“பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள். நான் உங்களுக்கு நற்போதகத்தைத் தருகிறேன்.” (வச.1,2)

மாணவர்கள், தங்கள் ஆசிரியர்கள் கற்பிப்பதை கவனமுடன் கேட்டு அவற்றை புரிந்து கொள்ளவேண்டும். இங்கு, நமது மூத்த ஆசிரியர்களுள் ஒருவரான நம் தகப்பனின் போதனையை கேட்டு அதன்படி நடப்பதன் அவசியத்தை சாலோமோன் ஞானி வலியுறுத்துகிறார்.

ஞானத்தை பெற்றுக்கொள்வதற்கு, நன்கு கவனித்துக்கேட்டு கற்றுக்கொள்ளும் ‘செவி’ தேவை. அவ்வாறு, **தகப்பனுடைய வார்த்தைகளைச் செவிசாய்த்து கேட்கும்போது நற்போதகத்தை (நல்ல போதனைகள்) பெற்றுக்கொள்ள முடியும்**. தாம் ஒரு காலத்தில் தன் தந்தையான தாவீது அரசருக்கு முன்பாக அமர்ந்திருந்த ஒரு கனிவான மகனாக இருந்ததை சாலமோன் தன் நீதிமொழிகளை கேட்போருக்கு நினைவூட்டுகிறார்.

ஒரு அறிவார்ந்த ஆசிரியர் தனது பலவீனங்களை உணர்ந்கவராய் இருக்கிறார். ஒரு மரபை, அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் பணியில், நமக்கே வழிகாட்டுதல் அவசியமாய் தேவைப் பட்டது என்பதை ஒப்புக்கொள்வது அதன் தொடக்கமாகும். அவிதத்திலேயே, சாலோமோன் ஞானி தன் தந்தையின் வழிகாட்டுதல் மற்றும் ஞானம் நிறைந்த நற்போதகம் தனக்கு கிடைத்ததை இங்கு பிரதிபலிக்கிறார்.

**2. ஆசிரியர்களுடைய மரபுச்சொத்தின் மதிப்பை அறிதல்: (வச.5 - 7)**

“ஞானத்தைச் சம்பாதி, புத்தி்யுயும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு. அது உன்னைத் தற்காக்கும்; அதின்மேல் பிரியமாயிரு, அது உன்னைக் காத்துக்கொள்ளும்.” (வச.5 - 6)

ஒரு திறமையான ஆசிரியர் என்பவர் விலைமதிப்பிட முடியாத மரபுச் சொத்துக்களை உடையவர். அவர், தன் மாணவர்களை எழிதில்; விட்டுக்கொடுக்காதவர்; அவர், தன்னுடைய மாணவர்களை பாதுகாக்கும் துணிவுகொண்டவர் என்பதை சாலோமோன் ஞானி இங்கு வெளிப்படுத்துகிறார். ஞானம் ஒரு பாதுகாவலன் ஆகவும் கௌரவ மகுடமாகவும் உருவகப் படுத்தப்படுகிறது. அது உலக நாடுகளின் நாணயங்கள் அனைத்தையும் விட மிகவும் மதிப்பு வாய்ந்தது என்று நீதிமொழிகள் கூறுகின்றன. சந்தைகள் வீழ்ச்சியடையலாம், செல்வங்கள் கரைந்து போகலாம், ஆனால் இறைவனின் சத்தியத்திலும் தெய்வீக ஞானத்திலும் நிலைத்த மனம், வாழ்க்கையின் புயல்களுக்கு எதிராக மீள்திறனுடன் வாழ்வில் என்றென்றும் தலை நிமிர்ந்து நிலைநிற்கிறது.

**3. ஆசிரியர்களிடம் கற்றவைகளை கடைபிடித்து கௌரவித்தல்: (வச.8,9)**

“நீ ஞானத்தை மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும்; நீ அதைத் தழுவிக் கொண்டால், அது உன்னைக் கனம்பண்ணும். அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும்; அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும்” (வச. 8, 9).

அறிவார்ந்த ஒரு ஆசிரியரின் மிக உயர்ந்த மரபு என்பது, மாணவன் சிறந்து விளங்குவதையும், நேர்மையுடன் நடப்பதையும், அதன் மூலம் மற்றவர்களைப் பயன்பெறுவதையும் காண்பதே

ஆகும். அவ்விதமாகவே சாலோமோன் ஞானியும் தன் தகப்பனாகிய தாவீது அரசரை ஆசிரியராக ஏற்றுக்கொண்டு, தன் தகப்பனின் உன்னதமான மரபுச்சொத்துகளுக்குத் தகுதியுள்ளவராக நடந்துகொள்கிறார். இவ்வசனங்களில், நாமும் அவரைப்போல் நமது முதல்-ஆசிரியர்களான நம் பெற்றொர்களிடம் கற்றுக்கொண்டவைகளை வாழ்வில் கடைபிடிக்கும்படி அவர் நம்மை அறிவுறுத்துகிறார்.

நமக்கு கற்பிக்கப்பட்ட நற்போதனைகளில் அல்லது நாம் பெற்றுக்கொண்டிருக்கிற மரபுச்சொத்துக் களில் நிலைத்திருந்து வாழ்ந்து காட்டுவோம். ஒரு ஆசிரியருக்குக் கிடைக்கும் மிக உயர்ந்த மரியாதை என்பது, அவருடைய போதனைகளைக் முழுமையாகக் கடைப்பிடிக்கும் மாணவர் களைப் பெற்றிருப்பதே ஆகும்..

அன்பானவர்களே! இன்று நம்முடைய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் நமக்கு எவ்வெவெற்றை மரபுச்சொத்தாக விட்டுச்சென்றுள்ளனர் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். நாம், நமது ஆசிரியர் களிடம் கற்றுக்கொண்டதில் இருந்தும், நம் பெற்றோரிடம் பெற்றுக்கொண்டதில் இருந்தும் நம் பிள்ளைகளுக்கும் மாணவர்களுக்கும் என்னென்ன மரபுச்சொத்துக்களை விட்டுச்செல்கிறோம்? நமது அடுத்த தலைமுறைக்கு எதைக் கடத்துகிறோம்? என்பதையும் ஆராய்ந்து பார்ப்போம். கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை நம் அன்றாட வாழ்வின் அடித்தளமாக்கிக்கொள்ள உறுதி கொள்ளுவோம். அதன்மூலம், நம்மைப் பின்தொடர்பவர்களுக்கு நம்முடைய வாழ்க்கையே ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் ஊழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-600 093. தென்னிந்தியா.

==========================================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# 'நல்ல விதைகள்' சுவிசேஷ கைப்பிரதிகள்

'GOOD SEEDS' GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி (ONE BATCH) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். BATCH SPONSORSHIP செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.==================================================================

வேத ஆராய்ச்சி....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-112 செப்டம்பர் 2026 எப்பிசோடு-112

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**முன்னுரை:** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர், இறைவனை நம்பி, நீதியிலும் இரக்கத்திலும் வாழ்ந்து, தங்கள் வாழ்க்கையின் மூலம் பிறருக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள் என்பதை இப்பாடல் நமக்கு எடுத்தியம்புகிறது. அன்றாட வாழ்வில் தூய்மை வாழ்வு வாழ யோசிக்கும் நமக்கு ஒரு அருமருந்தான பாடல் இது.

**1. ஆசிபெற்ற வாழ்வு: (வச.1 - 3)**

“ஆண்டவருக்கு அஞ்சிநடப்போர் பேறுபெற்றோர்: அவர்தம் கட்டளைகளில் அவர்கள் பெருமகிழ்வு அடைவர்” (வச.1)

சங்கீதக்காரர் முதலில், பேறுபெற்றோர் யார்? என்ற கேள்விக்கு விளக்கம் கொடுக்கிறார். அவர்கள் செல்வந்தர்கள் என்பதால் அல்ல, அதிகாரத்தில் இருப்பதால் அல்ல. அவர்கள் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லாததால் அல்ல, அவர்கள் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதால் பேறுபெற்றவர்கள். இங்கே ‘அஞ்சுதல்’ என்பது பயந்து ஓடுவது அல்ல; ஆண்டவரை மதித்து, அவருடைய அதிகாரத்தை ஏற்று, அவருடைய வழியில் நடப்பது. தேவனுடைய கட்டளைகள் அவர்களுக்கு ஒரு சுமை அல்ல, மகிழ்ச்சி; இது உண்மையான சீடத்துவத்தின் அடையாளம். நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவது ‘கட்டாயம்’ என்பதற்காக அல்ல; தேவனை நேசிப்பதால் கீழ்ப்படிகிறோம்.

இந்த ஆசீர்வாதம் அடுத்த தலைமுறைக்கும் செல்கிறது என்று இங்கு காண்கிறோம். “நேர்மையுள்ளோரின் தலைமுறை ஆசிபெறும்” (வச.2). “சொத்தும் செல்வமும் அவர்களது இல்லத்தில் தங்கும்: அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்” (வச. 3). இங்கே சங்கீதக்காரர் பொருளாதார ஆசீர்வாதத்தையும் குறிப்பிடுகிறார். ஆனால் வசனம் 3ன் இறுதியில் வரும் “அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்” என்பதே மிக முக்கியமானது. செல்வம் தற்காலிகமானது, பதவி மறைந்துபோகலாம்; ஆனால், நீதியான வாழ்க்கையின் சாட்சி நிலைத் திருக்கும். நாம் நம் பிள்ளைகளுக்கு சொத்தைக் காட்டிலும் பெரிய பாரம்பரியத்தை விட்டுச் செல்ல வேண்டும். அது ஆண்டவருக்கு அஞ்சும் வாழ்க்கையின் பாரம்பரியம்.

**2. ஒளி தரும் வாழ்வு: (வச. 4 - 6)**

“இருளில் ஒளியென அவர்கள் நேர்மையுள்ளோரிடையே மிளிர்வர். அவர்கள் அருளும் இரக்கமும் நீதியும் உள்ளோராய் இருப்பர்” (வச. 4).

சங்கீதக்காரர் இருள் இல்லாத வாழ்க்கையை வாக்களிக்கவில்லை. மாறாக, ‘இருளில் ஒளியென| என்கிறார். அதாவது, தேவனுடைய மக்கள் இருளைத் தவிர்ப்பவர்கள் மட்டுமல்ல; இருளின் நடுவில் ஒளியாக இருப்பவர்கள். இன்றைய உலகத்தில் அதிக குழப்பம் இருக்கிறது, அநீதி

இருக்கிறது, பயம் இருக்கிறது, சுயநலம் இருக்கிறது, சந்தேகம் இருக்கிறது. இந்த சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் ஒளியாக இருக்க வேண்டும். ஆனால், அந்த ஒளி எப்படி வெளிப்படுகிறது? நம்மிடம் அருள், இரக்கம், நீதி இருந்தால் வெளிப்படுகிறது. நாம் எவ்வளவு வேதாகமம் அறிவோம் என்பது மட்டும் நம் வாழ்வின் அளவுகோல் அல்ல. நம்மிடம் அருள், இரக்கம், நீதி நிறைந்துள்ளதா? என்பதே அளவுகோல்.

“மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர் நன்மை அடைவர்: அவர்கள் தம் அலுவல்களில் நீதியுடன் செயல்படுவர்” (வச. 5). நாம் பணத்தைப் எவ்வாறு பயன்படுத்துகிறோம்? ஏழைகளிடம் எப்படி நடந்து கொள்கிறோம்? நமது தொழில் அல்லது அலுவலில் எவ்வளவு நேர்மையாக நடந்து கொள்ளுகிறோம்? மற்றவர்களின் தேவையைப் பார்த்து மனமிரங்குகிறோமா? இவை அனைத்தும் நமது விசுவாசத்தின் வெளிப்பாடுகள்.

ஒரு மனிதனுடைய உண்மையான நினைவுச்சின்னம் அவன் கட்டிய கட்டிடம் அல்ல; அவன் தொட்ட மனிதர்களின் வாழ்க்கை. “எந்நாளும் அவர்கள் அசைவுறார்: நேர்மையுள்ளோர் மக்கள் மனத்தில் என்றும் வாழ்வர்” (வச.6). எனவே, இறை ஒளியை பெற்றவர், பிறரின் இருளில் ஒளியாக மாறவேண்டும்.

**3. அச்சமில்லாத வாழ்வு: (வச.7 - 10)**

“தீமையான செய்தி எதுவும் அவர்களை அச்சுறுத்தாது, ஆண்டவரில் நம்பிக்கை கொள்வதால் அவர்கள் இதயம் உறுதியாய் இருக்கும்” (வச. 7,8).

நம் வாழ்வில் தீமையான செய்தி எதுவும் வராது என்று இங்கு சொல்லவில்லை, ஆனால், அது அவர்களை அச்சுறுத்தாது. மனவுறுதியானது, நீதிமானின் நீதியில் அல்ல, ஆண்டவர் மீதான நம்பிக்கையிலிருந்து வருகிறது. அவர்களை அச்சம் மேற்கொள்ளாது; அவர்கள் நெஞ்சம் நிலை யாய் இருக்கும் (வச. 8).

இது ஒரு வலிமையான கிறிஸ்தவ சாட்சியாகும். உலக வழக்குப்படி எல்லாம் பாதுகாப்பாக இருக்கும் போதுதான் அமைதியாக இருக்கமுடியும்; ஆனால், விசுவாசம் நமக்கு கற்பிப்பது, குழப்பத்திலும் ஆண்டவரை நம்ப வேண்டும்.

இந்த நம்பிக்கையின் விளைவு என்ன? “அவர்கள் வாரிவழங்கினர், ஏழைகளுக்கு ஈந்தனர்” (வச. 9). பயந்த உள்ளம் கேட்கும், ஆனால் விசுவாசமுள்ள உள்ளம் கொடுக்கும். தன் எதிர்காலத்தைப் பற்றி பயப்படுகிறவன் பெற்றுக்கொள்ள விரும்புவான். ஆனால், ஆண்டவரை நம்புகிறவானோ வாரி வழங்குவான்; வாரி வழங்கினாலும், அவனுக்கு எதிர்காலம் குறித்த அச்சம் ஏதுமில்லை.

முடிவுரை: ஆண்டவருக்கு அஞ்சுகிறவன் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறான்; நீதியாக வாழ்கிறவன் இருளில் ஒளியாகிறான்; ஆண்டவரை நம்புகிறவன் பயமின்றி வாழ்கிறான். ஆகவே, இறை மக்களாகிய நாம் தூய்மை வாழ்வு வாழ விழைவோம். ஆண்டவரது ஆசி நம் அனைவரோடும் இருப்பதாக.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

================================================================

# வேதாகம போட்டி-190 (ஆகஸ்டு 2026 போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C. (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அன்னாள் ஜெபக்கனி (கோய)
10) அனி பாய் ஜாண் (திலி)
11) அனிதா மோகன்ராஜ் (ஈரோ)
12) அரோமா சாத்ராக் (திலி)
13) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
14) பிரீனா மேக்சின் தெபோரா (ராணி)
15) பெல்சி தங்கராஜ் (சென்)
16) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
17) பியூலா ஜேசுராஜன் (பாண்)
18) பியூலா ராஜசெல்வன் (கோய)
19) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
20) செலினா பென்ஸி வில்சன் Dr. (குவை)
21) செலினா வின்சென்ட் (திலி)
22) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
23) சந்திரலேகா (ஆபி)
24) சார்ல்ஸ் ஃபின்னி Dr. (சென்)
25) சார்ல்ஸ் சாலமோன் (தெல)
26) சார்லட் டேவிட் (சென்)
27) சித்ரா பெஞ்சமின் (திளு)
28) கிறிஸ்டல் ஜாய் யோபு (திது)
29) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
30) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
31) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
32) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
33) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
34) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
35) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
36) டெய்ஸி சாம் (கன்)
37) டேனியல் தாமஸ் (திலி)
38) டேவிட் ஜே.ஆர். (திலி)
39) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
40) தெபோராள் D. (சென்)
41) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
42) தேவகனி எமிலிசன் (சென்)
43) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
44) தேவகிருபை தங்கத்துரை (சென்)
45) தேவநேசம் ராஜாசிங் (சென்)
46) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
47) எபெனேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
48) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
49) எலிசபெத் செல்லத்துரை (சென்)
50) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா (மது)
51) எஸ்தர் டி.ஆர். (திலி)
52) எப்சிபா ஜாண் (ராணி)
53) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
54) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
55) குளோரி ரவீந்திரன் (திலி)
56) ஞானஜோதி பேரின்பம் (விரு)
57) ஞானம் ஜெபராஜ் (திலி)
58) ஞானம் பிலிப் (திபூ)
59) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
60) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
61) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
62) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
63) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
64) கிரேஸியா ஜெயபால் (சென்)
65) கிரிசெல்டா செய்லர் (சென்)
66) குணவதி ஜெபமணி (சென்)
67) ஹெலென் ஜான்சிராணி (திலி)
68) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
69) ஹெலென் திலக் (தூத்)
70) ஹெலென் I. (திளு)
71) ஹேமா அஜீத் (சென்)
72) ஹேமா கேப்ரியேல் (பெங்)
73) ஹெப்சி அசரியா (விழு)
74) ஹிம்லா ராஜகுமாரி (சென்)

75) ஹேமலதா வில்சன் (மது)
76) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
77) இந்திரா கெத்ஸி டேவிட் Dr. (திலி)
78) ஜமீலா செல்வராஜ் (சென்)
79) ஜமுனா K. (சென்)
80) ஜானகி டேனியல் (திலி)
81) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
82) ஜேன் தர்மராஜ் (திலி)
83) ஜான்ஸி சந்தியா (திலி)
84) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
85) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
86) ஜெபா ஜெயராஜ் (சென்)
87) ஜெபா ஜோன்ஸ் (கோய)
88) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
89) ஜெபமணி சில்வியா (தூத்)
90) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
91) ஜெபா சீனி (திலி)
92) ஜெனிலா S. (சென்)
93) ஜெனிட்ட ஷெரூபா ஞானவேல் (தர்)
94) ஜெரின் ஸ்டீபன் (மும்)
95) ஜெஸி செல்லதுரை (கோய)
96) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
97) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
98) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
99) ஜெயா பாக்கியம் (தஞ்)
100) ஜெயந்திஹேனா கிறிஸ்டோபர் (அரி)
101) ஜெயசீலி மார்டின் (தூத்)
102) ஜோனா ஸ்டீபன் (சென்)
103) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
104) ஜூலியட் ஜெபா (திலி)
105) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
106) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
107) கலா கிருபாகரன் (திலி)
108) கஸ்தூரி எலியாஸ் (திலி)
109) கிருபாவதி S.. (சென்)
110) லதா மைகேல்ராஜ் (சென்)
111) லீலா டேவிட் (சென்)
112) லீலா ஜோஸப் (கோய)
113) லில்லி ஜாண்ஸன் (சென்)
114) லிஸி டென்சிங் (திலி)
115) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
116) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
117) மரியாள் ஜே.எஸ். (தூத்)
118) மேபா ஞான சுகி (கன்)
119) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
120) மெர்ஸி ஃபுளோரா பாஸ்கர் (வேலூ)
121) மெர்ஸி ஸ்டீபன் (சென்)
122) மெர்லின் தேவராஜ் (சென்)
123) மெர்லின் சாமுவேல் (சென்)
124) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
125) மில்காள் சாம் (சென்)
126) முத்துமாலினி அலீஸ் (கோய)
127) நகோமி நிர்மலா (சென்)
128) நேச மாலா பீட்டர் (திலி)
129) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
130) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
131) ஓலிவியா லேங்டன் (திசி)
132) பாக்யபாய் ஆரோன் (திலி)
133) பமீலா எட்வின் (கன்)
134) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
135) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
136) பொன்மணி உத்தமசிங் (சென்)
137) பிரேமா ஸ்டாலின் (சென்)
138) பிரேம்குமாரி ஜெயசிங் (சென்)
139) பிரின்ஸ் தயாநிதி (சென்)
140) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
141) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
142) புனிதா ரவிநாத் (கோய)
143) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
144) ராஜபிரமீளா (திதூ)
145) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
146) ரமோலா அதிசயராஜ் (திலி)
147) ராணி ஃபுளோரா (தென்)
148) ராணி பிரபாகர் (திலி)
149) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
150) ரத்னாவதி பாண்டியன் (சென்)
151) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
152) ரோஸி ஸ்டீபன் (சென்)
153) ரூபவதி நோபிள் (திலி)
154) ரூத் HAPP (திசி)

155) ரூத் ஜாண்ஸன் (திலி)
156) ரூத் நரேஷ் (திலி)
157) சலோமி மனோகர் Dr. (சென்)
158) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
159) சாரா பாலசிங் (மது)
160) சரோஜா செல்வராஜ் (சென்)
161) சரோஜினி எலிசபெத் (சென்)
162) செல்வ பென்சி ஆபேல் (செங்)
163) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
164) செல்வி அமிர்தராஜ் (திளு)
165) செல்வி S. (சென்) (சென்)
166) செல்வின் S. (தூத்)
167) சாந்தி ஆல்பர்ட் (தென்)
168) சாந்தி ஜெயசீலன் (சென்)
169) சாந்தி ரோஸ் (கோய)
170) ஷர்மீளா செல்வராஜ் Dr. (கட)
171) ஷேபா சந்தோஷ் (சென்)
172) ஷீலா இஸ்ரேல் (திசி)
173) ஷீலா சேகர் (சென்)
174) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
175) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
176) சவுந்தரம் சாலமோன் (சென்)
177) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
178) ஸ்டெல்லா சூசைய்யா (தூத்)
179) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
180) சுகிர்தா சின்னதுரை (திலி)
181) சுஜாதா சாமுவேல் (சென்)
182) சுந்தரி அன்பழகன் (தென்)
183) சுசீலா தியோடோர் (திசி)
184) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
185) தனசீலி ஞானராஜ் (சென்)
186) தெல்மா ஸ்டேன்லி (மது)
187) உமா குளோரி (சென்)
188) உஷா ஜெபராணி SIS.H. (திளு)
189) வனஜா மாரிமுத்து (மது)
190) வசந்தா அன்பன் (திலி)
191) வசந்தா சந்திரசேகர் (கோய)
192) வசந்தா துரைராஜ் (ஊட்டி)(திசி)
193) வசந்தா சேகர் (சென்)
194) வசந்தி கருணாகரன் (சென்)
195) வசந்தி வாசன் (சென்)
196) விஜயராணி A. (சென்)
197) விஜி டேனியல் (செங்)
198) விமலா ஜெயக்குமார் (தூத்)
199) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
200) வினோலியா பால் (மது)
201) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
202) வைலட் சைரஸ் (திலி)

## வேதாகம போட்டி-190 ஆகஸ்டு 2026 போட்டிகள்
## (சங்கீதங்கள் 121-150, சரியான விடைகள்)

1. பஞ்சடைவாக உறைந்த மழை,
வெண்கம்பளி போல் பனி
கம்பளிபோல் வெண். பனி
இரட்சிப்பு பக்-2
2. பயணிகளின் சங்கீதம் இரட்சிப்பு பக்-19
3. அல்லேலூயா சங்கீதம் இரட்சிப்பு பக்-4
4. எருசலேம் சங்.122:3
5. கெம்பீரத்தோடே சங். 126:5
6. விழுகிற, மடங்கடிக்கப்பட்ட
யாவரையும் சங். 145:14
7. சரி சங். 140:11
8. சரி சங். 144:4
9. தவறு சங். 150:6
10. (ஆ) பலவான் சங். 127:4,5
11. (ஆ) கயிறுகளை சங். 129:4
12. (ஈ) சீயோனை சங். 132:13
13. எருசலேம் ச ங். 122:2-5
14. நீதிமான் சங். 141:5
15. அகங்காரிகள் சங். 140:5

# ‘அனைவரும் ஊழியத்தில்’

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

2.**நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

3. **நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் செப்டம்பர் 2026

### ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்

நாள்: 11-09-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்

நாள்: 18-09-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்

நாள்: 25-09-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி “தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க” ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================

# வேதாகம போட்டி-191 (செப்டம்பர் 2026 போட்டிகள்)

**நீதிமொழிகள் புத்தகம் முழுவதும்**

**1-3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 2,4,5,6,19)**

4-12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

வேதவசன இருப்பிடம் மற்றும் இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும்.

**பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-09-2026**

1. தகப்பனுடைய வார்த்தைகளைச் செவிசாய்த்துக் கேட்கும்பொழுது எதைப் பெற்றுக்கொள்ள முடியும் என சாலோமோன் ஞானி குறிப்பிடுகிறார்?
2. பிரம்மாண்டமான ஒரு விருந்தை ஆயத்தம் செய்த பெண் யார்?
3. 'பெருநெஞ்சன்' என்ற வார்த்தையை, திருவிவிலியம் மற்றும் பரிசுத்த பைபிள் ஆகியவை இணைத்திருமறையில் எவ்வாறு குறிப்பிடுகின்றன?
4. வாயாடியும், ஒன்றுமறியாத நிர்மூடமுமாய் இருக்கிறது யார்?
5. விரோதங்களை ஒழித்து பலவான்கள் நடுவே சிக்கறுப்பது எது?
6. எது இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்?
7. 'தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடைவான்' - சரியா தவறா?
8. 'துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்துபோம்' - சரியா தவறா?
9. 'முத்துக்களைப்பார்க்கிலும் மானமே நல்லது' - சரியா தவறா?
10. ஆரம்பத்திலே துரிதமாகக் கிடைத்த 'இது' முடிவிலே ஆசீர்வாதம் பெறாது:

அ) வெற்றி ஆ) வருமானம் இ) சுதந்திரம் ஈ) ஆதாயம்

11. விவேகமுள்ள மனுஷன் 'இதை' அடக்கி வைக்கிறான்:

அ) ஆசையை ஆ) கோபத்தை இ) நாவை ஈ) அறிவை

12. சீட்டு 'இங்கே' போடப்படும்; காரியசித்தியோ கர்த்தரால் வரும்:

அ) பெட்டியிலே ஆ) மடியிலே இ) தரையிலே ஈ) பையிலே

13. ஞானம் வாங்கப் போகிறான்!
பணம் கொண்டு போகிறான்!
மனம் இன்றிப் போகிறான்! யார் அவன்?

14. மூன்று இவை மூன்று! மூன்று இவை மூன்று!
தாழ்மைக்கு பலன் இவை மூன்று!
தெய்வபயத்துக்கு பலன் இவை மூன்று! எவை இந்த மூன்று! எவை இந்த மூன்று?

15. பால் நல்ல பால், பருகும்-ஆகாரம் உனக்கிந்த பால்!
பால் நல்ல பால், பருகும்-ஆகாரம் உன் வீட்டாருக்கிந்த பால்!
பால் நல்ல பால், பணிப்பெண்கள் ஊதியம் உனக்கிந்த பால்!
என்ன பால்? இது என்ன பால்?

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-09-2026

================================================================================

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

தொகுப்பாசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்

பாகம்-88 செப்டம்பர் 2026 எப்பிசோடு-88

# நினைத்தருளுகிறவர்



THE LORD WHO REMEMBERS

Jehovah Zakhar

' யேகோவா சாகார் '

தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்.யாத்.2:25

God looked upon the children of Israel; and, God remembered them. Exo.2:25

சர்வத்தையும் தமது வல்லமையுள்ள வசனத்தால் தாங்குகிற இயேசுவானவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு செப்டம்பர் மாதத்தின், விசேஷித்த நல்வாழ்த்துக்கள்.

**யாரையெல்லாம் நினைத்து ஆசீர்வாதம் அருளுகிறார்?**

**1சாமு.1:10-19** கசப்பு நிறைந்த, நிந்தையும் அழுகையுமான வாழ்வின் மத்தியிலும் கர்த்தருடைய சந்நிதியில் இருதயத்தை ஊற்றி பொருத்தனையுடன் விண்ணப்பம்பண்ணின உங்களை அவர் நினைத்து, "நீ சமாதானத்துடன் போ, உன் விண்ணப்பத்தின்படி உனக்குக் கட்டளையிடுகிறேன"; என்கிறார்.

**ஆதி.8:1** பல வருடங்களாக எப்பக்கத்திலும் அடைபட்ட நிலை, ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டப்பட்ட நிலை. ஆசீர்வாதங்களைக் காணாக்கூடாதபடி கண்கள் கட்டப்பட்ட நிலை. இதின் மத்தியிலும் நீதிமானாக உத்தமனாக வாழ்ந்த உங்களுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்ததால், இதுவரை வெளியே வரமுடியாதபடி தடையாக இருந்த ஜலப்பிரளயம் வற்றி, காய்ந்து போகும்படி செய்து, ஒருவரும் பூட்டக்கூடாதபடி ஆசீர்வதித்து, "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" என்கிறார்.

**யாத்.2:23-35** பிசாசினால் உண்டான அடிமைத்தன வாழ்வில், தீய பழக்கங்களில் சிக்கித்தவித்து விடுதலைவேண்டி தேவனிடம் முறையிடுகிறவர்களுடைய பெருமூச்சின் சத்தம் தேவசந்நிதியில் போய் எட்டியதால், கர்த்தர் முழு விடுதலை அருளுகிறார்.

**ஜெபம்:** எங்கள் தகப்பனாகிய இயேசு மாஹாராஜாவே! உமக்கு ஸ்தோத்திரம் (சங்.115:12). உலகத்தார் மத்தியில் உமக்குப் பயந்து, உம்மையே நம்பியிருக்கிற எங்களை நினைத்தருளி ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவீராக. இயேசுவின் நாமத்தில், பிதாவே. அல்லேலூயா, ஆமென்.

---

**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-184 செப்டம்பர் 2026)

ஆசிரியர்: சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்



# மாய மனிதனின் சாயம் வெளுத்தது

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் TIM என்ற ஒரு மனிதன், தலையில் தொப்பியுடன் மேஜைமீது தைல பாட்டில்களை அடுக்கிவைத்து விற்பனை செய்துவந்தான். "இது அமேசான் காடுகளிலுள்ள மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது; இந்த அதிசய தைலத்தை வழுக்கை, முடி உதிர்தல் போன்ற குறைபாடு உள்ளவர்கள் உபயோகித்தால் தலைமுடி 'கரு-கரு' என வளர்ந்துவிடும்; இத்தைலத்தின் விலை ரூ.25/- மட்டுமே' என சாதுரியமாகப் பேசி, ஆயிரக்கணக்கான தைல பாட்டில்களை விற்றுவந்தான். ஆனால், தைலத்ததை தலையில் பூசிய எவருக்கும் முடி வளரவில்லை; அவர்கள் TIM-மிடம் புகார் செய்தபோது, "90நாட்கள் தொடர்ந்து பூசினால்தான் முடி வளரும்" எனக்கூறி தைலத்தை விற்றுவந்தான்.

ஒருநாள் அவன் விற்பனை செய்துகொண்டிருந்தபோது பலத்த காற்று அடிக்கவே, அவன் தலையில் இருந்த தொப்பி காற்றில் பறந்து சென்றது. அந்தோ! அவன் தலை முழு வழுக்கையாக இருந்தது எல்லார் கண்களிலும் பட்டது. அதைப்பார்த்தவர்கள், "தலைமுடி வளர தைலம் விற்பவருக்கே வழுக்கையா?" எனக் கேட்கத் தொடங்கிவிட்டனர். TIM-ன் தலை குறித்த இச்செய்தி வேகமாக பரவவே, அவனது பிரச்சாரம் அனைத்தும் 'சுத்த-பொய்' என மக்களுக்குத் தெரியவந்தது; அவனுடைய மாயத்தின் சாயமும் வெளுக்கத்தொடங்கியது.

இந்நிலையில் போலீஸ் TIM-மிடம் வந்து, "உன் கடை போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது எனவே கடையை அகற்றிவிடுவோம்" என எச்சரித்தனர். அதற்கு TIM, "ஐயா! என் 7 பிள்ளைகளையும் குடும்பத்தையும், காப்பாற்ற நான் ஒருவன் மட்டும் இந்த ஒரு கடை மட்டும் வைத்து சம்பாதிக்கிறேன்", எனக் கெஞ்சினான். தைலம் வாங்கி ஏமாந்தவர்கள் புகாரளிக்கவே, போலீஸ் TIM-ஐ கைதுசெய்தது. விசாரணையில் '7 பிள்ளைகள்' 'ஒரு கடைதான்' என்றது பொய்; அவன் இந்தியா முழுதும் கடைவைத்து மக்களை ஏமாற்றியதும் தெரியவந்து; போலீஸ் அவனை சிறையில் அடைத்தது.

பிரியமானவர்களே! நாமும் பொய்-வேஷமிட்டு போலி-வாழ்க்கை வாழ்வோ மானால் TIM என்ற மாய மனிதனின் சாயம் வெளுத்ததுபோல் நமது வேஷங்களும் வெட்டவெளிச்சமாகி, நாமும் தண்டனை பெறும் சூழ்நிலைகள் வரும். இதை உணர்ந்து உண்மையுடனும், நேர்மையுடனும் வாழ்வோம்.

வேதம் இவ்வாறு கூறுகிறது:

மாயக்காரனின் மகிழ்ச்சி ஒரு நிமிஷமே நிற்கும். யோபு-20:4

ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடுக்கக் கூடாது. சங்-24:4

மனுஷனுடைய மாயையை கர்த்தர் அறிவார். யோபு-11:11

மாயையை பற்றிக்கொள்கிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையை போக்கடிக்கிறார்கள். யோனா-2:8

---

M.AZARIAH GNANADOSS M.A, M.ED

EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
## 2ம் வருகைக்குத் தயாராகு
# இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

தொகுதி-10 பகுதி-03 எப்பிசோடு-50 செப்டம்பர் 2026

**கட்டுரை ஆசிரியர்: முனைவர். திருமதி. சலோமி மனோகர்**



**10. மீண்டும் தாமஸ் கிறிஸ்தவர்கள்**

**3. டச்சுக்காரர்களின் தலையீடு:**

டச்சு கிழக்கிந்திய கம்பெனிக்கு (VOC), வர்த்தகத்தில் முதன்மை கவனம் இருந்தாலும், புராட்டடஸ்டன்ட் கிறிஸ்தவத்தை ஊக்குவிக்கும் கொள்கையையும் கொண்டிருந்தது. டச்சு சீர்திருத்த திருச்சபை ஊழியர்கள், கால்வினிசக் கொள்கைகளைப் பின்பற்றி, தங்கள் கிறிஸ்தவ நம்பிக்கையை தங்கள் வெளிநாட்டு முயற்சிகளுடன் பரப்பும் வாய்ப்பாகக் கண்டனர். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை புராட்டடஸ்டன்ட் கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதன் மூலம், உலகின் ஒரு பெரிய கிறிஸ்தவமயமாக்கலுக்கு பங்களிப்பு செய்து, இயேசுவின் 2ம் வருகைக்கு தயாராகமுடியும் என்றும் அவர்கள் நம்பினர். இந்த நம்பிக்கையில் அவர்கள், மிஷனரி முயற்சிகளில் தீவிரமாக பங்கேற்றனர்.

இருப்பினும் டச்சுக்காரர்கள், மத இலக்குகளை வணிகத்துக்கு இணையானக் கருதி. போர்த்துகீசியர்களைப் போல கட்டாய மதமாற்றங்களை பின்பற்றவில்லை. கேரளாவில் உள்ள தாமஸ் கிறிஸ்தவர்களின் வரலாற்றில் டச்சுக்காரர்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தனர். குறிப்பாக கி.பி.1663ல் போர்த்துகீசியர்களிட மிருந்து மலபார் கடற்கரையை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பிறகு போர்த்துகீசியர்கள் தாமஸ் கிறிஸ்தவர்கள்மீது ரோமன் கத்தோலிக்க நடைமுறைகளைத் திணிக்க முயன்றாலும், டச்சு ஆதரவு தாமஸ் கிறிஸ்தவர்கள் தங்கள் திருச்சபை சுயாட்சியைப் பாதுகாக்கவும் போர்த்துகீசிய கட்டுப்பாட்டிலிருந்து தப்பிக்கவும் அனுமதித்தனர். டச்சுக்காரர்கள் சிரியாக் ஆர்த்தடாக்ஸ் பிஷப்பின் வருகையையும் எளிதாக்கினர். இது இறுதியில், மலங்கரா திருச்சபை, மேற்கு சிரியாக்கின்; வழிபாட்டு முறை மற்றும் அதன் நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள வழிவகுத்தது. டச்சுக்காரர்கள், தங்கள் வர்த்தக வலையமைப்பு மூலம், மலங்கரா திருச்சபை சிரியாக் ஆர்த்தடாக்ஸ் திருச்சபையிடம் உதவிபெற உதவினர். குறிப்பாக, கி.பி.1665ம் ஆண்டில் ஜெருசலேமின் பிஷப் கிரிகோரியஸ் அப்துல் ஜலீலை தங்கள் வர்த்தகக் கப்பலில் கேரளாவிற்கு அழைத்துவந்தனர். பிஷப் கிரிகோரியஸின் வருகையானது, மலங்கரா திருச்சபை மேற்கு சிரியாக்கின் வழிபாட்டு முறை மற்றும் நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள வழிவகுத்தது.

இவ்வாறு மேற்கு சிரியாக் வழிபாட்டு முறையை ஏற்றுக்கொண்டதனால், தாமஸ் கிறிஸ்தவ சமூகத்திற்குள் பிளவு ஏற்பட்டது. புதிய நடைமுறைகளை ஏற்றுக் கொண்டவர்கள் 'புதிய விசுவாசம்' (புத்தென்கூட்டுக்கர்) என்றும், பழைய நடைமுறைகளில் இருந்தவர்கள் 'பழைய விசுவாசம்' (பழையகூட்டுக்கர்) என்றும் அறியப்பட்டனர். டச்சு ஈடுபாடு, மத சீர்திருத்தத்தை

நேரடியாக நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்றாலும், தாமஸ் கிறிஸ்தவர்கள் மீது ஆழமான மற்றும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியதோடு ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் அழுத்தத்தை எதிர்கொண்ட செயிண்ட் தாமஸ் கிறிஸ்தவர்களுக்கு (நஸ்ரானி கிறிஸ்தவர்கள்) ஆதரவை உறுதிசெய்தது. இந்த ஆதரவு பெரும்பாலும் அவர்களின் பொருளாதார மற்றும் அரசியல் நலன்களுடன், குறிப்பாக அவர்களின் மசாலா வர்த்தக ஏகபோகத்தை பராமரிப்பதிலும் போர்த்துகீசிய செல்வாக்கை பலவீனப்படுத்துவதிலும் பின்னிப் பிணைந்திருந்தது. புராட்டஸ்டன்ட் மதத்தினராக இருந்த டச்சுக்காரர்கள், பொதுவாக மத சகிப்புத்தன்மையைக் கடைப்பிடித்தனர், இது யூத சமூகங்கள் உட்பட பல்வேறு மதக் குழுக்களை அவர்கள் ஆட்சியின் கீழ் செழிக்க அனுமதித்தது. கால்வினிசத்தின் ஆதிக்கம் இருந்தபோதிலும், நெதர்லாந்து மத சகிப்புத்தன்மைக்கு ஒரு நற்பெயரையும் வளர்த்துக் கொண்டது. ஒரு முக்கிய டச்சு மனிதநேயவாதியான டெசிடெரியஸ் எராஸ்மஸ், கத்தோலிக்க துஷ்பிரயோகங்களை விமர்சித்தாலும், தாம் ஒரு கத்தோலிக்கராகவே இருந்து, திருச்சபையை சீர்திருத்தம் செய்ய வாதிட்டார்.

திருவாங்கூர்-டச்சுப் போருக்குப் பிறகு, டச்சுக்காரர்கள் இந்தியாவில் தங்கள் செல்வாக்கை இழந்ததால், அவர்களின் காலனிகள் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டன. டச்சுக்காரர்கள் டயம்பர் ஆயர்; கூட்டத்தில் நேரடியாக ஈடுபடவில்லை; எனினும்;, பின்னர் அவர்கள் கேரளா வந்து, அப்பகுதியில் தங்கள் இருப்பை நிலைநாட்டினர். டச்சுக்காரர்கள், செயிண்ட் தாமஸ் கிறிஸ்தவர்களின் உதவியை நாடியதோடு, போர்த்துகீசியர்களை எதிர்த்தவர்களை ஆதரித்தனர். டச்சுக்காரர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த கொச்சி, நாகப்பட்டினம் மற்றும் சின்சுரா போன்ற பகுதிகளில் தேவாலயங்களையும் பள்ளிகளையும் நிறுவினர். ஆர்மீனியர், யூதர், கிறிஸ்தவர் என அனைவரின் குடியேற்றத்தையும் டச்சுக்காரர்கள் ஊக்குவித்தனர். சீர்திருத்தம், கால்வினிசம் சகிப்புத்தன்மை ஆகியவை மூலம் கிறிஸ்தவத்தை வடிவமைப்பதில் டச்சுக்காரர்கள் முக்கிய பங்கு வகித்தனர்.

கி.பி.1824ம் ஆண்டு ஆங்கிலோ-டச்சு ஒப்பந்தப்படி, டச்சு கோரமண்டல் உட்பட இந்தியாவில் உள்ள டச்சு உடைமைகள் இறுதியில், ஆங்கிலேயர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டன. மாறாக, போர்த்துகீசியம் மற்றும் பிரிட்டிஷ் போன்ற பிற ஐரோப்பிய சக்திகள் தங்கள் காலனித்துவ ஆட்சி மற்றும் மிஷனரி நடவடிக்கைகள் மூலம் இந்தியாவில் கிறிஸ்தவ நற்செய்தி பரப்பும் பணியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD),
(POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==========================================================================

# DETAILS ABOUT US


**OUR CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com


**OUR BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**OUR UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

UPI ID: sjddharmaraja@okhdfcbank

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

**OUR QR CODE**

Rev. Dharmaraja S.J.D

UPI ID: sjddharmaraja@okhdfcbank

Scan to pay with any UPI app

==========================================

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு

## GOOD TIDINGS BIBLE PRINTS

(GOOD SEEDS TRACTS - நல்ல விதைகள் கைப்பிரதிகள்)

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 22 வகையான நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை, கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதியின் ஒரு தொகுதியை (BATCH SPONSORSHIP) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சென்னை-93. தென்னிந்தியா.

==========================================

==========================================



# வசன தியானம்

ஆசிரியர்: Rev. S.J.D. தர்மராஜா,
ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள்,

தியானம்-173 செப்டம்பர் 2026

## ஞானமா? மதியீனமா?

### இரண்டு பெண்களின் குரல்கள்

### உங்கள் தேர்வு எது?

பேதைமையை விட்டு விலகுங்கள், அப்பொழுது பிழைத்திருப்பீர்கள்; புத்தியின் வழியிலே நடவுங்கள். நீதி.9:6

நீதிமொழிகள்.9ம் அதிகாரம், ஞானத்தையும் மதியீனத்தையும், இரு பெண்களாக உருவகப்படுத்தி, விசுவாசிகளைக் கூவி அழைக்கும் ஒரு சக்திவாய்ந்த ஆன்மீகச் சவாலை முன்வைக்கிறது. இருவரும் அழைப்பிதழ்களைத் தயாரிக்கிறார்கள், பாமரரை இலக்காகக் கொள்கிறார்கள். ஆயினும், இருவரின் பாதைகள் முற்றிலும் மாறுபட்ட இலக்குகளுக்கு இட்டுச் செல்கின்றன.

**ஞானம்:** 'ஞானம்' என்ற பெண், பிரம்மாண்டமான ஒரு விருந்தை ஆயத்தம் செய்கிறாள். அவள் தன் வீட்டை முழுமையின் அடையாளமான ஏழு தூண்கள் மீது கட்டுகிறாள். அவள், 'மதியீனத்தை விட்டு விலகி பிழைத்திடுங்கள்' (வச.6) என்ற செயல்பாட்டுக்கு அழைக்கிறாள். ஞானப்பெண்ணின் பந்தியில் உணவு அருந்தி, மெய்யான அறிவின் அடித்தளமாகிய 'கர்த்தருக்குப் பயப்படுதலைத்\ தேர்வு செய்யும் வாய்ப்பு நம்முன் உள்ளது. ஞானத்தைத் தேர்ந்தெடுப்பது முதிர்ச்சியையும், அறிவையும், தீர்க்காயுசுள்ள ஒரு வாழ்க்கையைத் தருகிறது.

**மதியீனம்:** 'மதியீனம்' என்னும் பெண்ணும், தன் வீட்டு வாசலில், கட்டுப்பாடின்றி அமர்ந்து இருக்கிறாள். அவள் சிறந்தது எதையும் வழங்குவதில்லை; குறுக்கு வழிகளை மட்டும் கற்பிக்கிறாள். "திருட்டுத் தண்ணீர் தித்திக்கும், ரகசிய உணவு இன்பமாகும்" (வச.17) என்பது மதியீனம் என்ற இப்பெண்ணின் மயக்கும் பாடலாகும். மதியீனம், மனிதனின் மறைக்கப்பட்ட மாமிச ஆசைகளைத் தூண்டி, உடனடித் திருப்தியையும் அளிக்கிறது. ஆனால், அவளுடைய வாக்குறுதியோ, திகிலிலே முடிகிறது. அவளது வீட்டிற்குள் நுழைந்த, அவளுடைய விருந்தினர், ஏற்கனவே மரணத்துக்குள் சென்று, கல்லறையின் ஆழத்தில் மூழ்கிக் கொண்டு இருப்பதை உணராதிருக்கிறாhகள்.

அன்பர்களே! இன்றும், இவ்விரு குரல்களும் நம் கவனத்தை ஈர்க்கப் போட்டியிடுகின்றன. ஞானம் நம்மைத் தியாகத்திற்கும், வளர்ச்சிக்கும், நிறைவாழ்வுக்கும் அழைக்கிறது. ஆனால், மதியீனமோ, நம்மை இரகசிய-சுகம் மற்றும் பரிதாப-அழிவுக்கு அழைக்கிறது. இவ்விரு குரல்களில் நம் தேர்வு எது? ஞானமா? மதியீனமா?. நம்மால் இரு உணவு-மேஜைகளிலும் உணவருந்த முடியாது; ஆகவே, மதியீனத்தின் வஞ்சக அழைப்புக்கு செவிமடுக்காமல், "தேவஞானம் என்னும் மேஜையே வேண்டும்" என்று சொல்லுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்;வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

# செய்தித்துளிகள் செப்டம்பர் 2026

1. காங்கோ நாட்டில் எபோலா தொற்று பரவியதில், 2642பேர் உயிரிழந்துள்ளனர்; மேலும் 5515பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2. 'வாரம் 5நாள் பணி' கோரிக்கையை வலுயுறுத்தி, செப்.11ம் தேதி நாடுதழுவிய வேலைநிறுத்தம் செய்ய வங்கி ஊழியர்கள் முடிவு.

3. கூட்டுறவு வங்கியின் நகைக்கடன் இனி ஒரு கிராம் தங்கத்திற்கு அதிகபட்சம் ரூ.10000வரை வழங்க கூட்டுறவுத்துறை முடிவு.

4. மூலப்பொருள் விலையுயர்வு காரணமாக கோவில்பட்டி கடலைமிட்டாயின் விலை 25 சதவீதம் உயர்த்தப்பட்டதாக தகவல்.

5. ஜப்பான் ஆசிய விளையாட்டு போட்டிகளுக்கான (செப்.19லிருந்து - அக்.4, 2026வரை) இந்திய ஆண், பெண் கபடி அணிகள் அறிவிப்பு.

---

## ஆசிரியர் தினம்2026

## நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு
பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணி யாளர்கள், வலைதளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறைமக்கள், தபால்-துறை மற்றும் அச்சக நண்பர்களாகிய உங்கள் குடும்பங்களில் உள்ள அனைத்து ஆசிரியர் களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்..

இரட்சிப்பு

**INDIA TEACHERS DAY 2026**




---

**AI செயற்கை நுண்ணறிவு வினா-விடை விவிலியம்** எப்பிசோடு-01. ஆதியாகமம் புத்தகம் -01

## செப்டம்பர் 2026

**வினா-1** நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ? என்ற காயீனின் கேள்வி எதை வெளிப்படுத்துகிறது?
விடை: பாவம், மனிதனின் சமூகப் பொறுப்பையும் மனித உறவையும் அழிக்கிறதை இது உணர்த்துகிறது.

**வினா-2** :பாபேல் கோபுர சம்பவம்: கடவுள், பேரிடர் வழியாய் பதிலளித்தது ஏன்?
விடை: கடவுள் மொழிகளை குழப்பினார், கட்டுமானப்பணி நிறுத்தப்பட்டு கைவிடப்பட்டது. 'பெருமை' அழிவுக்கு ஆரம்பம்' 'சுயத்தை உயர்த்தினால் தோல்வியே மிஞ்சும்' என்பவற்றை உணர்த்தவே.

**வினா-3** யாக்கோபு தேவனோடு போராடி, புது அடையாளம்/மனமாற்றம் பெற்றது எதைக் காட்டுகிறது?
விடை: 'எத்தன்' யாக்கோபு போராட்டத்தின் மூலம் 'இஸ்ரவேல்' ஆகிறார். கடவுள் காயப்படுத்தியே குணப்படுத்துகிறார், பலவீனத்தில் போராடுவோருக்கே கடவுள் புதிய அடையாளத்தைத் தருகிறார் என்பதை இது காட்டுகிறது.